REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 15உ வெள்ளி (30-12-55) ★ ★ மெய்விபூ: மார்கழி 16உ சனி (31—12—55) [இதழ் 170

மதத்தின் பெயரால் பெண் அனுபவித்த கொடுமை!

பாஜுவா, டிச. 28—

இங்கிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள தர்ப்பா எனும் இடத்தில் சாதுவின் சீடர் ஒருவர், பெண் ஒருத்தியை ஈவு-இரக்கமின்றி அடித்தார். போலீசார் இந்தக் கொடுமையைத் தடுக்க முயன்றபோது, கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள், 'போலீசார் தடுக்கக்கூடாது' என்று கூறினராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

குஜராத்தி முதலாளியின் பிடிவாதம்

சர்க்காரின் 'சோஷலிச' மாதிரி போக்கு

300 தொழிலாளர்கள் பட்டினிப் போர்

இன்றும் பலர் கைது

சென்னை, டிச. 29—

குஜராத்தி முதலாளியின் பிடிவாதப் போக்கினாலும், காங்கிரஸ் சர்க்காரின் 'சோஷலிச மாதிரி'க் கொள்கையினாலும், இன்று மாலை முதல் 300 தொழிலாளர்கள் 'உண்ணாவிரதம்' மேற்கொள்ளுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மைசூர் பிரீமியர் மெட்டல் தொழிற்சாலை கதவடைப்பிற்கு எதிராக வேலையிழந்த தொழிலாளர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தை ஒட்டி, தொண்டையார்பேட்டையில் உள்ள தொழிற்சாலையின் மற்றோர் பிரிவில் வேலை செய்யும் 300 தொழிலாளர்கள், நேற்று முதல் தொழிற்சாலைக்கு வெளியே பட்டினிப் போரில்' ஈடுபட்டிருக்கும் தொழிலாளிக்கு ஆதரவாகவும், நிர்வாகிகளின் பிடிவாதப் போக்கிற்கு எதிராகவும் இன்று முதல் வேலை செய்யும்போதும்கூட ஏதும் உண்ணாமல் வேலை செய்வர் என்று அறிவிக்கப்படுகிறது. சக்தி இழந்து வீழ்ந்துபடும் வரை அந்த 300 தொழிலாளர்களும் பட்டினியாகவே வேலை செய்வர் என்றும அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில், நேற்றுக் கைது செய்யப்பட்ட 13 தொழிலாளர்களுக்கும், ரூ. ஒன்று வீதம் அபராதம் விதிக்கப்பட்டது; அபராதம் கட்ட மறுத்த அவர்களுக்கு ஆறு மணி நேர காவல் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

தங்கசாலையில் உள்ள தொழிற்சாலை விற்பனை அலுவலகத்தின்முன் தொடர்ந்து மறியலும் நடைபெறுகிறது.

'இன்னமும் சர்க்கார் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறதா?'—என்றே மறியலில் ஈடுபடும் தொழிலாளர்களைக் கண்ணுறும் பொது மக்கள் கேட்டுச் செல்கின்றனர்.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

தோல் தொழிற்சாலை தொழிலாளர்கள் நடவடிக்கை

சென்னை, டிச. 29—

சென்னைக்கு அடுத்துள்ள அயனாவரத்திலிருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சுமார் 60 தொழிலாளர்கள், தொழிற்சாலைக்குள்ளிருந்தவாறே இன்று காலை வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனராம்.

தொழிலாளர் தோழர் ஒருவருக்கு முதலாளிகள் 'லீவ்' அனுமதிக்க மறுத்ததையும், தொழிலாளர் சங்கச் செயலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததையும் கண்டித்துத்தான் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாம்.

பண்டித நேருவின் 'பெருமை'

சுசேதா கிருபளானி சாடு!

"மக்களின் 'சிவில்' உரிமைகள் பறிக்கப்படுகின்றன; சர்க்காரின் நிர்வாக இயந்திரம் முழுவதும் ஆளும் கட்சியிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; நாட்டில் தொழிற்சங்க இயக்கம் சுதந்திரமாக வளர வழி இல்லை; ஒருவகையிலும், 'சோஷலிச மாதிரி' சமூக அமைப்பை நோக்கி நாடு முன்னேறவில்லை.

"நேரடியாகவோ, மறைமுகமாகவோ வானொலியும், பத்திரிகைகள் முழுவதும், சர்க்காரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றன.

"இதர கட்சியினர் செய்கிற நல்ல காரியங்களை எல்லாம் தனக்குரியன என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார் பிரதமர் நேரு; தவறுகள் ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் அவற்றை பிறர்மீது பழி சுமத்துகிறார்.

"காங்கிரசார் இன்று முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு காரியமாற்றுகின்றனர்.

"காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவேகூட, ஊழியர்கள் தங்கள் கருத்தை சுதந்திரமாக எடுத்துக் கூற முடிவதில்லை. அங்கு ஒரு மனிதரின் சர்வாதிகாரம்தான நிலை பெற்றிருக்கிறது.

"எனவே, ஜனநாயகம் காப்பாற்றப்படவும், மக்களுக்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரவும் ம. சோ. கட்சி முன் வரவேண்டும்.

"சுதந்திரம் பெற்ற பிறகு உறுதியான ஜனநாயகம் நாட்டில் நிலைக்கும் என்று நம்பினோம்; ஆனால் இன்று, இந்தியா சர்வாதிகாரத் துறையில் முன்னேறிக் கொண்டிருப்பது வருந்தற்குரிய ஒன்றாகும்,"

என்று, திருமதி சுசேதா கிருபளானி ம. சோ. கட்சி மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மராட்டியரை வஞ்சிக்கப் புதிய திட்டம்

இந்தியாவின் வணிகத் தலைநகராக பம்பாய் நகரம்!

பம்பாய், டிச. 29—

இந்தியாவின் வணிகத் தலைநகராக—மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் பம்பாய் நகரைக் கொண்டு வரும் யோசனையை இந்தியப் பிரதமர் நேருவும், பம்பாய் பிரதமர் மொரார்ஜி தேசாயும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்றும், 'இப்போதுள்ள சூழ்நிலைகளில்' இந்த யோசனையை மராட்டியர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பப்படுவதாயும் கூறப்படுகிறது.

மதம்தான் உலகை ஒன்றுபடுத்துமாம்!

டாக்டர் இராதாகிருஷ்ணன் கூற்று

சென்னை டிச. 29—

"விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், அரசியல், பொருளாதாரம் இவற்றில் எதுவும் உலகை ஒன்றுபடுத்த உதவாது; மதத்தின் அடிப்படையில்தான் உலகம் ஒன்றாக முடியும்,"

என்று குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், விழா ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்

புயல் - வெள்ள நிதிக்கு ரூ. 5,001

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம் தருகிறது

கழகத் தோழரின் முயற்சி வெற்றி

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டம், 27—12—55-ல், வேலூரில், தலைவர் திரு. டி. பி. கேசவ ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி, புயல் நிவாரண நிதிக்கு ரூ. 10,001 கொடுக்கவும், உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் துயரை ஓரளவிற்குப் போக்கிய முதலமைச்சர் காமராசர் அவர்களைப் பாராட்டுவதாகவும் ஒரு அவசரத் தீர்மானம் அனுப்பியிருந்தார்.

நிதி நிலைமை குறைவாக இருப்பதால் ரூ. 5,001 தரவும், முதலமைச்சர் காமராசரைப் பாராட்டியும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

நிவாரண வேலைக்கு ரூ. 4 கோடி செலவு?

நிதி மந்திரி அறிவிப்பு

மதுரை, டிச. 29—

"மாநிலத்தில் புயல், வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண வேலைகளைச் செய்வதற்கு சுமார் ரூ. 4 கோடி வரை சர்க்காருக்குத் தேவைப்படும்,"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

★

'மாவட்ட ஆட்சி மன்றங்கள் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தலாம்'

ஏ.எல்.சி. கிருட்டிணசாமியின் தீர்மானத்திற்கு ஒப்புதல்

"மாவட்ட ஆட்சிமன்றங்களில் தமிழில்தான், கடிதப் போக்குவரத்து இருக்கவேண்டுமென்றும், ஆங்கிலத்தில் உள்ள பெயர்ப் பலகை 'வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்ற அலுவலகம்' என்று தூய தமிழில் மாற்றப்பட வேண்டுமென்றும் தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி ஒரு தீர்மானத்தை அனுப்பியிருந்தார். இது, பொதுப் பிரச்சினையானதால், இதை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க சென்னை சர்க்காரின் உத்திரவு கேட்கப்பட்டிருந்தது.

ஆட்சேபனை இல்லை

'மாவட்ட ஆட்சி மன்றங்கள் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்துவதால் எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை; ஆனால், தமிழில் நடத்தப்படுகின்ற ஆட்சி மன்றம் சர்க்காருக்கு அனுப்பும் கடிதங்கள் மட்டும் ஆங்கிலத்தில் இருத்தல் வேண்டும்—என்று சர்க்கார் தகவல் தந்திருப்பதால், அந்தத் தீர்மானம் அடுத்த கூட்ட நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும்,'

என்று, தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி கேட்டதொரு கேள்விக்கு, தலைவர் திரு. டி. பி. கேசவ (ரெட்டியார்) 27—12—55 கூட்டத்தில் பதிலளித்திருக்கிறார்.

இந்தியாவிற்குப் பிரிட்டன் 'நாகரீகம்' கற்றுத் தந்ததா?

'பேதைகளின் கதைப்பு' என்கிறார் குருஷ்சேவ்

மாஸ்கோ, டிச. 29—

"இந்தியாவைவிட்டு பிரிட்டன் வெளியேறி இராவிட்டால், பிரிட்டன் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கும்; சீன மக்கள் சியாங் - கே - ஷேக்கை அடித்துத் துரத்தியதுபோல, இந்திய மக்கள் பிரிட்டிஷாரை அடித்துத் துரத்தியிருப்பார்கள்.

இந்தியாவிற்குப் பிரிட்டன் 'நாகரிக'த்தைக் கற்றுத் தந்ததா? அந்தச் சொல்லின் முழுப் பொருள், கொள்ளையிடுதலாகத்தான் இருந்தது. இந்தியாவிற்குப் பிரிட்டன் நாகரீகத்தைக் கற்றுத் தந்தது என்பது, பேதைகளின் கதை - சரித்திரம் அறியாதோரின் கூற்று,"

என்று, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி முதல் செயலாளர், சோவியத் மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மையான 'மல்யுத்தம்'

டாக்டர் லோகியா தயாராகிறாராம்!

ஐதராபாத், டிச. 28—

"சர்க்காருக்கும்—புதிய சோஷலிஸ்டுகளுக்கும் இடையே இனி 'உண்மையான குஸ்தி' நடைபெறுவதை இந்திய மக்கள் காண முடியும்.

"சில குஸ்திகள் (மல் யுத்தம்) வெறும் காட்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டவையாக இருக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—12—'55 வெள்ளி

'சோஷலிசம் மாதிரி.........'

'சோஷலிச சமுதாயம்' என்ற பொருள் செறிந்த, மக்களின் இலட்சியக்கனவான சொற்றொடரின் இடையில் 'மாதிரி' என்ற சொல்லையும் ஆபாசமாகச் செருகி, தங்களின் பிற்போக்கான—நயவஞ்சகமான ஆட்சிமுறைப் போக்கிற்கு எதிர்காலக் கொள்கை என்ற பெயரும் தந்து, ஆவடியில் அதற்குத் தீர்மான வடிவமும் கொடுத்தார்கள்—காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

இந்த 'ஆவடி சர்க்கஸ்' நடைபெறுவதற்கு முன்னும் சரி—பின்னும் சரி, காங்கிரஸ் ஆளவந்தார்கள, வாழ்க்கையின் அடித்தளத்தில் சுரண்டலுக்கும்—கொடுமைக்கும் இலக்காகி, பற்றுக்குறையாலும்—பஞ்சத்தாலும் — பட்டினியாலும் தாக்கப்பட்டுப் பரிதவிக்கும் ஏழை எளிய மக்கள், பாட்டாளி — தொழிலாளி — விவசாய — நடுத்தர மக்களின் நலன்களில் சிறிதும் கவலை கொள்ளாதவர்கள் என்பதை அவர்களது கடந்த எட்டாண்டுக்கால ஆட்சிமுறைத் தெளிவாக விளம்பிக் கொண்டிருக்கிறது. அதே போதுதான் ஆவடியில், இந்த ஆண்டுத் துவக்கத்தில், 'சோஷலிச மாதிரி' சமூகம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

முதலாளி — தொழிலாளி, நிலப்பிரபு—விவசாயி, பணக்காரன்—ஏழை, உழைக்காதவன்—ஓயாது உழைப்பவன், உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற ஏற்றத் தாழ்வுகளற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு, காங்கிரசாரது 'சோஷலிச மாதிரிக் கொள்கை' உடன்பாடு உடையதல்ல என்பது மட்டுமின்றி, அத்தகு ஒரு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதில் தங்கள் கருத்தைத் தீவிரமாக்கிக்கொண்டிருக்கும் மக்களை ஏமாற்றுகிற நயவஞ்சகத்தையும் உள்ளடக்கியதாகும் அது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடியுந் தருவாயிலிருக்கிறது—சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் செலவில் நிறைவேறி வருவது!

'இது இரண்டாம் திட்டம்; நாலாயிரத்தெண்ணூறு கோடி ரூபாய் செலவிட உத்தேசம்'—என்று, குரலில் உறுதியையும், பார்வையில் பெருமிதத்தையும் வரவழைத்துக்கொண்டு, கையை உயர்த்தி, அகல வாய் திறந்து பேசுகிறார்கள்—காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

இந்தத் திட்டங்களில் தென்னாட்டின் நிலை என்ன? பங்கு எவ்வளவு?—என்று கேட்டால் ''ஏக இந்தியா'வின் சகோதர தேசிய இன மக்களிடையே நிலவும் 'ஒற்றுமை'யைச் சீர்குலைப்பது—பாரதத்தின் 'ஐக்கிய'த்திற்குக் குந்தகம்விளைவிப்பது கூடாது, ஆகாது; வடக்கோ - தெற்கோ — எல்லாம் இந்தியா'' என்று பதில் தருகின்றனர்.

ஏற்கனவே தொழில் மிகுந்தும் வளம் பெருகி நிற்பதுமான வடக்கு மேலும் உயரவும், தொழிலற்றதும் வளம் குன்றியதுமான தெற்கு கீழ் நோக்கிப் போவதும் எந்தப் பொருளாதாரத் தத்துவத்திற்கு உகந்ததோ தெரியவில்லை. ஒருவேளை 'அகில இந்தியா'க்களின் 'சோஷலிச மாதிரி' சமூக அமைப்புத் தத்துவம் இதுதான் போலும்!

இந்த 'சோஷலிச மாதிரி'க் கொள்கையின் பிதாக்களான மத்திய சர்க்காரின் மூலவர்களது போக்கு, இந்தியாவின் பொருளாதாரத் துறையில் எத்தகு பெரும் முரண்பாடுகளைத் தோற்றுவித்து வளர்த்து வருகிறது என்பதை 38-வது பொருளாதார நிபுணர்கள் மாநாட்டில் பேசிய பம்பாய் கவர்னர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அவர் கூறியுள்ள அந்த உண்மையை, 'மாதிரி சோஷலிசக்' கொள்கையினரான காங்கிரசார் மட்டுமின்றி, இதர 'அகில இந்திய முற்போக்காளர்'களும் கண்ணுற வேண்டுகிறோம்.

காங்கிரசாரது 'சோஷலிச மாதிரி'க் கொள்கை, 'வடக்கு - தெற்கு' என்பதைப் பொறுத்து எத்தகு விளைவுகளைக் கொண்டது என்பது ஒருபுறமிருக்க, அந்த வடக்கத்தியாரை தங்களது எஜமானர்களாகஏற்றுக்கொண்டு, 'அகில இந்தியத் தேசியம்' பேசும் சென்னையில் உள்ள 'பச்சைத் தமிழர்' ஆட்சியினர், அந்தச் 'சோஷலிச மாதிரிக் கொள்கை'யை எப்படி நாட்டில் உலவ விட்டிருக்கிறார்கள் என்பதை அறிவது, 'ஆவடி ஏமாற்று வித்தை'யை இன்னும் கொஞ்சம் வெளிச்சத்திற்கு இழுத்து வரும்.

'மைசூர் பிரிமியர் மெட்டல் தொழிற்சாலை — இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலை' என்ற அமைப்பின் ஒரு பிரிவை சட்ட விரோதமாக மூடிவிட்டு, அந்தப் பிரிவில் வேலை செய்த 175-தொழிலாளர்களையும், அவர்களது குடும்பங்களையும் பட்டினிக் கொடுமைக்கு ஆளாக்கியிருக்கிறார், அந்த ஆலையின் குஜராத்தி முதலாளி!

தொழிற்தகராறு சட்டப்படி தொழிற்சாலையை மூடிய 14 நாட்களுக்குள் சர்க்காருக்குத் தகவல் தரவேண்டும்—தரவில்லை அந்த முதலாளி. அவரிடமிருந்து தொழிற்சாலையை மூடியதற்கான காரணத்தைக் கேட்டறிய முற்படவுமில்லை—சென்னை சர்க்கார்!

மூன்றரை மாதக் காலமாக தொழிலாளர்களுக்குச் சட்டப்படி தரவேண்டிய நஷ்டஈடும் தரப்படவில்லை; அதைப் பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணத்தைத் தாமாகவே பெறுவிட்டாலும், தொழிற் சங்கத் தலைவர்கள் குத்திக் காட்டிய பின்பேனும் பெற்றுச் செயல்பட்டிருக்கலாம் சர்க்கார்—செய்யவில்லை.

மிகமிகப் பிற்போக்காளர்களான தாங்கள், நிர்ப்பந்தத்தினால் நிறைவேற்றி வைத்திருக்கும்-தொழிலாளர்களுக்கு ஓரளவு நன்மை பயக்கும் சிறுசிறு சட்டங்களின் பலன்களைக்கூட தொழிலாளர்கள் பெறமுடியவில்லை; இந்தச் சர்க்கார், தான் நிறைவேற்றிய சட்டத்தைத், தானே மதிக்க மறுத்து வரும் போக்கினால்.

இந்த தகராறை தொழில் நீதிமன்றத்திடமாவது ஒப்படைக்கக் கோருகின்றனர்—தொழிலாளர்கள்; செய்ய மறுக்கிறது—சர்க்கார்!

'சோஷலிச மாதிரிக் கொள்கை' எப்படி தொழிலாள மக்களுக்கு நன்மை பயக்கிறது, பார்த்தீர்களா?

விளைவு — பட்டினியால் வாடும் 175 தொழிலாளர்களும் நேரடியாகப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்; கடந்த மூன்று நாட்களாக மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்; சுமார் 40 பேர்வரை கைதாகி தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றனர்; அத்துடன், ஒரு வேலை இழந்த தொழிலாளி பட்டினிப் போர் தொடுத்துள்ளார் — நேற்று முன்தினம் முதல்; அதை ஒட்டி, ஆலையின் மற்றொரு பிரிவில் வேலை செய்துகொண்டிருக்கும் 200 தொழிலாளர்களும் தொழிற்சாலைக்குள் பட்டினியுடன் வேலை செய்வர், சக்தி இழக்கும் வரை—என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கோரிக்கைகளை ஈடேற்றிக் கொள்ள அரசியலில் 'பட்டினிப் போரை' ஆயுதமாக உபயோகிப்பது நமக்கு உடன்பாடானதல்ல; ஆயினும், அந்தத் தொழிலாளர்கள் வேறு வழியின்றி அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'பச்சைத் தமிழன்' சர்க்காரின் 'சோஷலிசமாதிரி'க் கொள்கையின் இலட்சணம் தானே, தொழிலாளர் தொடுத்துள்ள இந்தப் பட்டினிப் போரின் மூலம் தெரிகிறது.

இதுவரை தூங்கிவழிந்த 'ஏழை பங்காளர்கள்' இனியும் இது விஷயத்தில் தூங்காமல் உடனே விழித்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு செவிமடுக்க முன்வர வேண்டும் என்று இடித்துரைக்க விரும்புகிறோம்.

வடவரின் எடுபிடிகளாயுள்ள 'பச்சைத் தமிழர்'கள் மிக மட்டமான பிற்போக்குவாதிகள் என்பதையோ, வடநாட்டவர் தென்னாட்டவர்மீது ஆதிக்கம்புரியும் ஏகாதிபத்தியக் கொடுமையையோ, 'சோஷலிச மாதிரிக் கொள்கை' என்ற போர்வையால் மூடி மறைத்துவிட முடியாது.

கிராம மக்கள் நகரில் குடியேறுவதை தடுக்க முயற்சி

இந்தியசர்க்கார் நடவடிக்கை

புதுடில்லி, டிச. 28—

கிராமங்களிலுள்ள மக்கள் நகரங்களுக்குக் குடியேறுவது அதிகமாகிக்கொண்டே வருகிறதாம். இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய வசதிகள் செய்யப்படுமாம்.

நிலைமையை முழுவதுமாக உணர்ந்துள்ள சர்க்கார், இவ்வித நடவடிக்கையைச் சமாளிப்பதற்கு சமூக அபிவிருத்தித் திட்டங்களைப் பரவலாக்குவது பற்றியும், சிறிய கிராமத தொழில்களைத் துவக்குவது பற்றியும் ஆலோசனை செய்கிறதாம்; இதற்காகவே, கிராமப் பகுதிகளில் பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதும் குறிப்பிடப்படுகிறது.

ரூ. 8,25,000 செலவில் 'வால்மீகி இராமாயண' விமரிசனப் பதிப்பு

பரோடா பல்கலைக் கழகம் வெளியிடுகிறதாம்

பரோடா, டிச. 27—

'வால்மீகி இராமாயண'த்தின் விமரிசனப் பதிப்பு ஒன்றைத் தயாரித்து வெளியிடும் பணியை 1951-ம் ஆண்டில் மேற்கொண்ட பரோடா பல்கலைக் கழகம், வரும் 1956-ம் ஆண்டு ஜூன் திங்களில் 'பாலகாண்ட'த்தின் முதல் 20 'சருக்கங்'களை வெளியிடுவர் என்று தெரியவருகிறது.

நான்காண்டுகளுக்கு முன்னால் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான திருமதி ஹன்சா மேதா, கழகத்தின் இராமாயண ஆராய்ச்சித் துறையைத் துவக்கிவைத்ததிலிருந்து, 'வால்மீகி இராமாயணம்' பற்றிய சுவடிகள் இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டன.

காகிதத்திலும், ஓலை ஏடுகளிலும் இராமாயணக் கைப்பிரதிகள்—தேவநாகரி, நேபாளி, ஷாரதா, வங்காளி, மைதிலி, கிரந்தா நந்திநாகிரி, தெலுங்கு கன்னடம், மலையாளம், மற்றும் பல மொழிகளிலும் சேகரிக்கப்பட்டன.

காட்மண்டுவில் உள்ள பீர் புத்தகசாலையிலிருந்து, மிகப் பழமையானது என்று கருதப்படும் ஓலை ஏட்டுச்சுவடி இராமாயணம் முழுவதுமாகக் கொண்டுவரப்பட்டது. கையெழுத்துப் பிரதிகள் எல்லாம், புகைப்படம் பிடிக்கப்பட்டன. இராமாயணம் பற்றிப் பல மொழிகளிலும் உள்ள அச்சுப் பிரதிகளும் சேகரிக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் கிடைத்தவரை உள்ள பிரதிகள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

பிரபல இந்தியப் பேராசிரியர்கள் அடங்கிய ஆசிரியர் குழாம் ஒன்று நிறுவப்பட்டிருப்பதுடன், நடுநிலைமையாளர் குழு ஒன்றும்—உலகப் புகழ்பெற்ற புராண அறிவாளர்களைக் கொண்டு நிறுவப்பட்டிருக்கிறதாம்.

ஒன்பது ஆண்டுகளில் 'வால்மீகி இராமாயண'ம் முழுவதையும் ஆராய்ந்து விமரிசனப் பதிப்பை வெளியிடுவதற்கு ரூ 8,25,000 செலவாகும் என பல்கலைக் கழகம் கருதுகிறதாம்.

தனிப்பட்டவர்கள். பொதுநலக் கழகங்கள் முதலியவற்றிடமிருந்து ரூ. 88 753 நன்கொடை கிடைக்கும் என்றும், இதில் ஏற்கனவே ரூ. 61,753 கிடைத்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

'ஆரம்ப ஆசிரியர் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்'

சென்னை மாநாட்டில் வற்புறுத்தல்

சென்னை, டிச 23—

"ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்," என்று, பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மாநாட்டில் கலந்துகொண்ட மந்திரி உட்பட அனைவரும் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டியதின் அவசியம் குறித்துப் பேசியிருக்கிறார்கள்.

பச்சையப்பன் கல்லூரியில் 28-ந் தேதி நடைபெற்ற அந்த மாநாட்டின் காலைக் கூட்டத்திற்கு எம். ஏ. முத்தையா (செட்டியார்) தலைமை தாங்கினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கல்வி போதிக்கும் தரம் இப்போது வெகுவாகக் குறைந்து விட்டிருக்கிறது.

"ஏராளமான பேர்களுக்குத் தகுதி பெறாதவர்களைக் கொண்டு கல்வி போதிப்பதைக் காட்டிலும் தகுதியுடையோரால் சிலருக்கு மட்டுமேனும் கல்வி போதிப்பது எப்போதுமே நல்லது.

"அனேகப் பள்ளிகளில் ஒரே ஆசிரியர் நான்கு, ஐந்து வகுப்புகளுக்குப் பாடம் சொல்லித் தருவதை நான் கண்டிருக்கிறேன்

"நல்ல திறமையான ஆசிரியர்கள் இல்லாததற்குக் காரணம், ஆசிரியர்களுக்குக் கணிசமான சம்பளம் தரப்படுவதில்லை என்பது தான்.

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகிறது ; ஆனால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவது பற்றி அதில் பேச்சு மூச்சுக் கூடக் காணோம்.

"இன்றைய இளைஞர் தலைமுறையின் எதிர்காலம் அவர்கள் ஆரம்பப் பள்ளிகளில் பெறும் கல்வியின் தரத்தைப் பொறுத்தது தான் என்பதால், அதிருப்தி அடைந்த நிலையில் ஆசிரியர்கள் தொடர்ந்து தொழில் நடத்துவது மிக ஆபத்தானதாகும்.

"முடிந்தவர்கள் ஆசிரியத் தொழிலை விட்டு விலகவேண்டும்; பொறுப்பை இராஜிநாமாச் செய்யவேண்டும். இதன் மூலம் அவர்கள் தங்களது நண்பர்களுக்கும் உதவ முடியும். அப்போதாவது, சர்க்கார் விழித்துக் கொள்ளும்—ஆரம்ப ஆசிரியர் சம்பளத்தை உயர்த்துவது பற்றிக் கவனிக்கக் கூடும்."

மாநாட்டில் பேசிய மந்திரி இராமசாமி படையாச்சியார் பெரும் உபதேச பாணியில் பேசியிருக்கிறார்.

சர்க்கார் எப்போதும் ஆரம்ப ஆசிரியர்கோரிக்கைக்கு அனுதாபம் காட்டி வந்திருப்பதாயும், எனவே, அவர்கள் இதர தொழிலாளர்களைப் போல தங்கள் கோரிக்கைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக எந்த வித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்றும் உபதேசம் புரிந்திருக்கிறார்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவரான கே. விநாயகமும் ஆரம்ப ஆசிரியர் சம்பள உயர்வு குறித்துப் பேசினார்.

கல்வித்துறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு பேசுகையில், குழந்தைகளின் ஒழுக்கத்தை உருவாக்கும் ஆசிரியர்கள், எப்போதும் விதி, ஒழுங்கு, நன்னடத்தை இவற்றிலிருந்து விலகிச் செல்லக் கூடாது என்றும், ஆரம்ப ஆசிரியரின் கஷ்டங்களை சர்க்கார் பரிபூரணமாக உணர்ந்தே இருக்கின்றனர் என்றும், அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க சர்க்கார் தன்னாலானதை எல்லாம் செய்யும் என்றும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பரிசுப் போட்டி கட்டுப்பாடு விதிகள்

சென்னை சர்க்கார் வெளியீடு

சென்னை பரிசுப் போட்டி நகல் விதிகளைச் சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ளனர்.

ரூ. 500 முதல் ரூ. 1,000 வரையில பரிசு தரப்படும் போட்டிகளில் பிரவேசக் கட்டணத்தின் உயர்ந்தபட்ச அளவு ரூ. 1; ரூ 250 முதல் ரூ 500 வரையுள்ள போட்டிகளுக்கு அணா 8; ரூ. 250-க்குக் குறைவாக உள்ள போட்டிகளுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

கழகச் செய்திகள்

★

தோரமங்கலம் தி. மு. கழகம் (கிளை)

15—12—55ல், தோழர் எ. ஆண்டியப்பன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றி தோழர்கள் ச. அண்ணாமலை, மா. நடராசன், ர. அ. அண்ணாமலை, ர. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதுவை தி. மு. கழக வட்டக் குழு

25—12—55 மாலை 5 மணிக்கு புதுவை தி.மு கழகத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் வட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமையினால் இறந்துபட்டவர்கட்கும், கஷ்ட நஷ்டம் அடைந்துள்ளவர்கட்கும் அனுதாபம் தெரிவித்தும், வட்டக் குழுச் சார்பில் 27—11—55ல் நடைபெற்ற அண்ணா பொதுச்செயலாளர் வரவேற்புப் பொதுக்கூட்ட வரவு-செலவுக் கணக்குகள் ஒப்புக்கொண்டும் இருப்புத் தொகையான ரூ 102—2—3-ல் ரூ 101-ஐ புயல் நிவாரண நிதிக்கெனப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதுடன், நன்கொடை அளித்து உதவி செய்த அனைவருக்கும் நன்றியும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

நாகபட்டினம் தி. மு. கழகம்

25—12—55 மாலை 4 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் எஸ் கல்யாணம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், செயலாளர் தோழர் கே. கே. சித்திரவேலு அவர்களின் விலகல் கடிதம் உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், புதிய செயலாளராகத் தோழர் கே வீராமன், பொருளாளராகத் தோழர் ஏ. ராமசாமி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் சித்திரவேலு அவர்களது கழகப் பணி குறித்து நன்றி தெரிவித்தும் திராவிடர் திருநாளினை சிறப்பாக நடத்துவதெனவும், உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதெனவும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

விருதுநகர் நகர தி. மு. க.

25—12—55-ல் தோழர் கே சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற நகர தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், புயல், வெள்ளச் சேதங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

சென்னை சூளை தி. மு. க.

25—12—55ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் நவம்பர் மாத வரவு-செலவு கணக்குகளை ஒப்புக்கொண்டும், பொங்கல் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் மற்றும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பழனி தி. மு. கழகம்

26—12—55 இரவு 9 மணிக்கு தோழர் சா. இராசகோபால் இல்லத்தில், நகர தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் கே கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதுபோது ஜனவரியில் மாநில மாநாட்டு நிதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டதுடன், கழக உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்து ஐவரடங்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

சென்னை அறிவியக்க மன்றம்

25—12—55 காலை 10-30 மணிக்கு, சென்னை 27-வது வட்டம் (பூங்காநகர்) மேற்படி மன்றத்தில், தோழர் மு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில், வரவு-செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டும், பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், மன்றத் தலைவரது விலகல் கடிதத்தை அடுத்தக் கூட்டத்தில் பரிசீலிப்பது என்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சி நகர்மன்றத் தலைவருக்கு வரவேற்பு

26—12—55-ல், காஞ்சிபுரம் நகரசபைத் தலைவர் திரு. வி. என் பெருமாள் அவர்களுக்கு. காஞ்சிபுரம் ஆரம்ப ஆசிரியர்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில், திரு டி. டி. வரதாச்சாரி தலைமையில் வரவேற்பு ஒன்று தரப்பட்டது.

தோழர்கள் சி வி எம். அண்ணாமலை, ஆர். பாபு ஆகியோர் வரவேற்பில் கலந்து கொண்டனர். தோழர் சி வி எம் அண்ணாமலை அவர்கள் நன்றி கூறிய பின்பு, நகரசபைத் தலைவர் அவர்கள் பேசுகையில் தன்னால் இயன்ற உதவிகளை ஆசிரியர்களுக்குச் செய்வதாகக் கூறியும், வரவேற்புக்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக்கொண்டார்

திருப்பத்தூர் சி. எம். எஸ். நினைவு மன்றம்

28—12—55 காலை 10 மணியளவில் வ. ஆ மாவட்டம் திருப்பத்தூர் சின்னகடைத் தெரு, சி எம எஸ் நினைவு மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர் எஸ் மணி தலைமையில் நடைபெற்றபோது, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளபட்டது.

தாராபடவேடுப் பஞ்சாயத்துக் குழு

28—12—55 மாலை 4 மணிக்கு, மேற்படி பஞ்சாயத்துக் குழுவின் அவசரக்கூட்டம் திரு. எம். கிருஷ்ணராஜ் தலைமையில் நடைபெற்றது அக்கூட்டத்தில், குடியாத்தம் தாலுகா, தாராபடவேடு பஞ்சாயத்து எல்லைக்குள் தொன்று தொட்டு இருந்து வருகிற காட்டுப்பாடி இரயில்வே சந்திப்பையும் இரயில்வே காலனியையும் மேற்படி பஞ்சாயத்தின் ஆலோசனையில்லாமல் வேலூர் தாலுகாவைச் சேர்ந்த சேனபாக்கம் கிராமத்துடன் சேர்த்திருப்பதைக் கண்டித்தும்; இச்செயல் பஞ்சாயத்தின் நலனையும் பொருளாதார வருவாயையும் பாதிப்பதுடன், அங்குள்ள மக்களது உரிமையையும் பறிப்பதாக இருப்பதால் சர்க்கார் இது விஷயத்தில் உடனடியாகத் தலையிடுப் பரிசீலனை நடத்தித் தக்க உததரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானம ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

புயல் நிவாரண நடவடிக்கைகள்

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, டிச. 28—

உடைந்துபோன ஏரிகளின் படுகையில் தோண்டப்பட்ட குழிகளிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காகத் தமிழ் நாட்டில் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள குடியானவர்களுக்கு, வழக்கமான கட்டணங்களின் பாதித் தொகைகள்மீது 'பம்பு செட்டு'கள் வாடகைக்குத் தருவதற்கு சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

தஞ்சையில் பட்டுக்கோட்டை பகுதியிலும், திருச்சி மாவட்டத்திலும் 1956 பிப் 15-ந் தேதி வரையில், தீவிர உரத் திட்டத்தை நீடிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாவட்டங்களிலுள்ள குடியானவர்களுக்கு விதைகள் வாங்குவதற்குத் தக்காவிக் கடன்கள் வழங்கப்படும்; நெல், வாழை, புகையிலை, தேங்காய், எள் சாகுபடியாளர்கள் இந்தக் கடன்களைப் பெறுவதற்குத். தகுதியுடையவர்களாவர்.

ரூ 20-க்குமேல் தீர்வை செலுத்தாத ஏழைக் குடியானவர்களுக்கு நெல், எள் விதைகள் இலவசமாக வழங்கப்படும்.

குணியமுத்தூர்

குணியமுத்தூர் ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. எம். சுந்தரம் தலைமையில், தி மு கழகச் செயலாளர் தோழர் தங்கமாணிக்கம் உட்பட்ட புயல் வெள்ள நிவாரண நிதிக் குழுவினர் ரூ 510 பொது மக்களிடம் வசூலித்து, 29-12-55ல் கோவை மாவட்டக் கலெக்டரிடம் சேர்ப்பித்துள்ளனர்.

விக்கிரமசிங்கபுரம் (நெல்லை மாவட்டம்)

26—12—55ல், நெல்லை மாவட்டக் கலெக்டர் அனுமதியுடன் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் அவர்களுக்கு, தி. மு. கழகத் தோழர்களால் புயல் வெள்ள நிவாரண நிதியாகத் திரட்டப்பட்ட 2 மூட்டை அரிசியும், அம்பாசமுத்திரம் நகராண்மைக் கழகத் தலைவர் அவர்களிடம் ரூ. 18—4—0-வும் சேர்க்கப்பட்டது. நிதி உதவிய அனைவருக்கும் தி. மு கழகச் சார்பில நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னிமலை

இவ்வூர் தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுக் கட்சித் தோழர்கள் ஒன்று திரண்டு, ஊர்ப் பொதுமக்களிடம் வசூலித்த ரூ. 75/ சர்க்கார் புயல் நிவாரண நிதிக்கு அனுப்பியுள்ளனர்.

வங்கனூர்

இவ்வூர் தி. மு. கழகத் தோழர்களும், வ. உ. சி. வாசகசாலைத் தோழர்களும் இணைந்து, ஊர்ப் பொதுமக்களிடம் புயல், வெள்ள நிவாரண நிதிக்கென ரூ 87-3-0ம், 71 சேர் அரிசியும் (அரிசி விற்றதில் கிடைத்த ரூ. 48—13—0) திரட்டி, மொத்தத தொகையையும் சர்க்கார் நிவாரண நிதிக்கு அனுப்பினர்

★

கழகத் தோழர்கள் காணிக்கை

வங்கனூர் தி. மு. கழகத் தோழர்களனைவரும், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்குமுகத்தான், கிளைக் கழகச் சார்பில் நிவாரண நிதியாக ரூ. 7—8—0 தி. மு கழகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்— பெற்றுக்கொண்டோம்.

—தி மு. க. தலைமை நிலையம்

★

மறுப்பு

21—12—55 'தினத் தந்தி' இதழில், 'எழு கிணறு 9-வது வட்டம் புயல் நிவாரண நிதி வசூல், காந்தி தேசிய வாலிபர் சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், ஸ்டான்லி மருத்துவத் தொழிலாளர் இலவச இரவுப் பாடசாலை ஆகியவைகளின் சார்பில் திரட்டப்பட்டது' என்று வெளியிட்டுள்ள செய்தி தவறானது. இந்த நிதி வசூலில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்ளவில்லை எனவே அன்று திரட்டிய நிதிக்கும், கழகத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று, சென்னை 9-வது வட்டம் தி. மு. கழகக் கிளைச் செயலாளர் தோழர் டி. ஜி. சாமி அறிவிக்கிறார்.

சேலம் மாவட்ட மாணவர்கட்கு

"நமது மாவட்டத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் நன்றாகப் பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். சேலம் மாவட்ட மெங்கும் தி. மா. மு. கழகத்தின் கிளைகள் அமைக்கவும், மாவட்டக் கிளை அமைக்கவும், நமது இயக்க மாணவர்களை ஒன்று திரட்டி எதிர்கால ஆக்க வேலைகளுக்குத் திட்டமிடவும், சேலம் மாவட்டத்திலுள்ள நமது இயக்க மாணவர்கள் கூடிப் பேசுவது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.

"மேற்கண்ட பிரச்சினைகள் பற்றி ஆராய 1—1—56 ஞாயிறு காலை 10 மணிக்கு, சேலம் நகரம் கிச்சிப்பாளையம் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகக் கட்டிடத்தில் நமது மாணவர்கள் கூட்டம் ஒன்று நடைபெறும். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் அன்பும், அக்கரையும் கொண்ட மாணவர்கள், மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மா. மு. கழக அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் வி. சிவப்பிரகாசம் அவர்கள் அறிவிக்கிறார்.

'தமிழில் இசையில்லை என்ற கூற்று அறியாமையின் விளைவே'

"'தமிழில் இசையில்லை— இசைக் கருவிகள் இல்லை' என்று சிலர் கூறுகின்றனர். இவர்தம் கூற்று அறியாமையின் விளைவே! இன்பத் தமிழில் இசைபாடி இந்நாட்டு மக்களை இன்பக் கடலில் ஆழ்த்திய பாணர்களும், பாடினிகளும் வாழ்ந்த நாடு நம் நாடு! முழவும் முரசும் முழங்கிய நாடு நம் நாடு! யாழும் குழலும் சிறந்து விளங்கிய நாடு நம் நாடு."

இவ்வாறு, சென்னை சைதாப்பேட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு க. கோவிந்தராசன் அவர்கள், 25—12—55 மாலை 4 மணிக்கு நகர் மன்றத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில், 'கவிதையும் கண்ணீரும்' எனும் தலையில் உரையாற்றுங்கால் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ஒவ்வொருவருக்கும் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் அவசியம் வேண்டுமென்றும், அவை இரண்டும் இரு கண்களாகும் என்றும், அவை இரண்டையும் காட்டிக்கொடுத்து வாழும் நல்வாழ்வை மற்றவர் காணின் எள்ளி நகையாடுவர் என்றும் எடுத்துக் கூறினர்.

உல்லாச பிரயாணிகள் மூலம்

ரூ. 5 கோடி வருமானம்

புதுடில்லி, டிச. 28—

60 நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருகை தந்து, சுற்றுப்பிரயாணம் செய்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 1951-ல் 20,000 ஆக இருந்தது—1952-ல் 25 448 ஆக அதிகரித்து, 1953-ல் 28,000-கு எட்டியது. 1954-ல் மொத்தம் 39 833 பேர் இந்தியாவுக்கு வந்ததாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்தம் 20,605 பேர் வருகை தந்ததாகவும், இதன் மூலம் மட்டும் இந்தியாவுக்குக் கிடைத்த மொத்த வருமானம் ரூ 5 கோடி என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை நகர சபை வரவு-செலவுத் திட்டம்

'நிதி நிலை மோசமில்லை' எனத் தகவல்

சென்னை நகர சபையின் 1956-57-ம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமானம் ரூ 262 69 இலட்சமாகவும், செலவு ரூ 261·18 இலட்சமாகவும் மிச்சம ரூ 1·51 இலட்சமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

அடுத்த ஆண்டின் நிதிநிலைமை மோசமாக இருக்காது என்பதால், சைக்கிள் 'லைசென்ஸ்' வரியைக் குறைப்பதற்குக் கமிஷனர் சிபாரிசு செய்திருக்கிறார்.

ஏழை மக்கள் உபயோகிக்கும் வாகனமாக சைக்கிள் இருப்பதாலும், சாலைகளுக்கு அதனால் சேதமொன்றும் ஏற்படாமலிருப்பதாலும், இப்போது 6 மாதத்திற்கு ரூ. 2 என்றிருக்கும் கட்டணத்தை 8 அணாவாகக் குறைக்கலாமென்றும், லைசென்ஸ் எண் தகடுக்கு மட்டும் 2 அணா வசூலிக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஏழைக் குழந்தைகளுக்கு உடை வழங்கும் மேயரின் நிதிக்கு ரூ. 45,000 அளிக்கவும், ஏழை மக்கள் மலிவான கட்டணத்தில் இசை, கேளிக்கை நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் திறந்தவெளி அரங்கம் ஒன்று அமைப்பதற்கு ரூ. 2 இலட்சம் அளிக்கவும், மோசமான நிலையிலுள்ள 'விக்டோரியா பப்ளிக் ஹால்' பழுது பார்க்கும் செலவுக்கு ரூ 25,000 செலவிடவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை நகரசபைத் தொழிலாளர்களுக்கும், குறைந்த சம்பளமுள்ள ஊழியர்களுக்கும் மலிவான விலையில் குடியிருப்புகள் நிர்மாணித்துத் தருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது; ஊழியர்களின் 'போனஸ்' நிதியிலிருந்து இதற்கென ரூ 10 இலட்சம் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

****

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

—தி. மு. க. தலைமை நிலையம்

****

குன்றக்குடியார் புத்தாடைகள் வழங்கினதாகப் புரளி!

‘தினமணி’யின் பித்தலாட்டத்திற்கு மறுப்பு

26—12—55-ந் தேதி வெளியூர் ‘தினமணி’ இதழில், உண்மைக்கு மாறுன கீழ்க்கண்ட செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன :—

“புயலால் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் வேதாரண்யப் பகுதி மக்களேயும், ஸ்தலங்களேயும் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தமது தொண்டர்களுடன் பார்வையிட்டார்கள். கட்டிமேடு, திருத்துறைப்பூண்டி, தானுக்கோட்டகம், மேலமருதூர், வன்னியமேடு, ஆதிரங்கம் முதலிய கிராமங்களுக்கு விஜயம் செய்தார். அன்னாருடன் ஸ்தல ஸ்தாபன மந்திரி இராமசாமி படையாச்சி, ஸ்ரீ. சர்தார் வேதரத்தினம் பிள்ளை, ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சத். சுவானந்த சுவாமி ஆகியோர் உடன் சென்றனர்.

கட்டிமேடு, தானிக்கோட்டகம், பிச்சங்கோட்டகம், மேலமருதூர், வன்னியமேடு, திருத்துறைப்பூண்டி, ஆதிரங்கம், வேதாரண்யம் முதலிய கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேஷ்டி, சேலை, துண்டு, சட்டைத் துணிகள் முதலியன வழங்கியதுடன், துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் வார்த்தையும் ஸ்ரீ. அடிகள் கூறினார்,”

என்று, வெளியிட்டிருக்கிறது.

“மேற்கண்ட செய்திகள் ‘அவாள்’ ஏட்டின் புனைந்துரையோ அல்லது குன்றக்குடியாரின் குதர்க்கப் பேச்சோ நாங்கள் அறியோம்!

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுநாள்வரை எந்த வித உதவியும் அளிக்கப்படவில்லை-தோப்புத்துறை, வேதாரண்யம் இரு ஊர்களைத் தவிர! திருத்துறைப்பூண்டி வழியாக வேதாரண்யம் சென்ற அடிகளார் முதல், அமைச்சர் வரை, எங்களூரிலும், மற்றும் சில ஊர்களிலும் இறங்கி ஆறுதல் வார்த்தையோ, ஆடைகள் தானமோ செய்யப்படவில்லை. உண்மை அப்படியிருக்க, ‘கோயங்காவின் ஏடு’ அப்படிக் கூறுகிறது.

இதுவரை எங்களூர் வட்டாரங்களைப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் மு. கருணாநிதி, தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ, திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கம், வடஆற்காடு மாவட்டச்செயலாளர் முல்லை-சத்தி, திருவாரூர் தென்னன் ஆகியவர்களைத் தவிர, வேறு எந்த அதிகாரியோ, வேறு கட்சித் தலைவர்களோ, மதத்தைக் காக்கும் மதிவாணர்களோ வந்து ஒரு ஆறுதல் மொழிகூட சொல்லவில்லை. தோழர் மு. கருணாநிதி அவர்களைத் தவிர வேறு யாரும் நிவாரணம் அளிக்கவில்லை.

“அதிருப்தி அடைந்து கிடக்கும் மக்களுக்கு ‘தினமணி’யின் செய்திகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும்; அதன் ‘தில்லுமுல்லு’ செய்தியைக் கண்டித்து காங்கிரஸ்காரர்கள்கூட கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

“கட்டிமேடு, ஆதிரங்கம் மக்களுக்கு நிவாரணமளிக்க வேண்டுமென்று தாசில்தார் அவர்களுக்கு நாங்கள் மனுச் செய்திருந்தும், இதுநாள் வரை அவரும் கவனிக்கவில்லை; எனவே, பாமர மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியைத்தான் எதிர்பார்க்கும் அளவில் வந்துவிட்டார்கள்,”

என்று, கட்டிமேடு தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பமுகம்மது அறிவிக்கிறார்.

பிரயாணியை தாக்கிய போலீஸ் பட்டாளம்!

கோழிக்கோடு, டிச. 29—

போலீஸ்காரர்கள், தலைமை போலீஸ்காரர்களடங்கிய 225 பேர் கொண்ட போலீஸ் பட்டாளம் ஒன்று, இங்குள்ள இரயில் நிலையத்தில் ‘காவல்’ வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இரயில் வண்டி ஒன்றில் கூட்டமாக ஏறி உட்கார்ந்திருந்தனராம்; இவர்கள் உட்கார்ந்திருந்த வண்டியில் பிரயாணி ஒருவர் ஏற முயற்சித்தாராம். போலீசார் அதைத் தடுத்திருக்கிறார்கள்; பிரயாணிக்கும்—போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் முற்றிவிடவே போலீசார் பிரயாணியை நையப் புடைத்துவிட்டிருக்கின்றனர்; பிரயாணியை இரயில் பெட்டியிலிருந்து வெளியே பிடித்துத் தள்ளியிருக்கின்றனர்.

‘உடனே இரயில்வே போலீசார், உள்ளூரில் உள்ள போலீஸ் உதவி சூப்பரிண்டெண்டிற்குத் தகவல் தந்ததும், அவர்கள் விரைந்துவந்து, அடிபட்ட பிரயாணியை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, போலீசார் அவ்வளவு பேரையும் வண்டியைவிட்டு இறக்கி, இரயில்வே நிலையத்திலேயே தங்கவைத்துவிட்டாராம்.

இந்தப் போலீசார் அத்தனை பேரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், பிரதமர் நேருவின் வருகையை ஒட்டி பந்தோபஸ்து வேலைக்காக இங்கு வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

அவர்களை எல்லாம், ‘ரிசர்வ்’ செய்யப்பட்ட பெட்டிகளில் ஏற்றி அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுவதாயும், ஏனெனில், அவர்கள் திரும்பவும் இந்த மாதிரி நடந்துகொள்வதைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடு என்றும் தெரியவருகிறது.

தாய் பலியானார்; குழந்தை பிழைத்தது!

கொள்ளையர் தாக்குதலின் விளைவு

டெலடோ (ஒகியோ), டிச. 26—

கருத் தரித்துப் பிரசவத்திற்காக மருத்துவ மனையில் சேர்ந்திருந்த ஜி-ஆன்-பர்லேக் என்ற பெண்மணி தனது கணவரையும், 2 குழந்தைகளையும் விட்டுவிட்டு மருத்துவ மனையில் உள்ள தேவாலயத்திற்குப் ‘பாவ மன்னிப்பு’ப் பெறுவதற்காக நடந்து சென்றார்.

‘பாவ மன்னிப்பு’ப் பெற்றுக்கொண்டு, தன்னிருப்பிடத்திற்குத் திரும்பும்போது, அவருக்காகக் காத்துக்கொண்டிருந்த கணவர் அவரைக் கண்டு திடுக்கிட்டுப் போய்விட்டார்.

அந்தப் பெண்மணியின் தொண்டையிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்ததாம். கணவர்பெயரை சொல்லிக்கூப்பிட அந்தப் பெண்மணி முயன்றிருக்கிறார்.

இதைக் கண்டு திடுக்குற்ற அவர் போலீசாருக்குத் தகவல் தந்ததும் ஆம்புலன்ஸ் வண்டியில் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவர் வயிற்றைக் கிழித்து பெண்குழந்தையை உயிருடன் எடுத்தனர் டாக்டர்கள்.

பெண்மணி காயத்திற்குப் பலியானார். குழந்தை பிழைத்துவிடக்கூடும் என்று டாக்டர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பெண் தாக்கப்பட்டதற்குக் காரணம், கொள்ளையிட வேண்டும் என்பதுதான் என்று கூறப்படுகிறது.

டிக்கெட்டில்லாப் பிரயாணிகள் குழப்பம்

போலிசார் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இருவர் பலி

கோராக்பூர், டிச. 29—

அசாம் வடகிழக்கு இரயில்வேயில் உள்ள லம்டிங் எனும் இரயில் நிலையத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிகிறது.

டிக்கெட் இல்லாது பிரயாணம் செய்த சிலர் விளைவித்த குழப்பத்தை அடக்குவதற்காகவே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும், அதன் விளைவாக 12 பேர் காயமடைந்தனர் என்றும், அவர்களில் இருவர் மருத்துவமனையில் காயங்களால் இறந்துபட்டதாயும் கூறப்படுகிறது.

உண்மையான ‘மல்யுத்தம்’

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்—அதாவது, ‘குஸ்தி’ போடுபவர்கள், ‘ஒருவரை ஒருவர் பலமாகத் தாக்கிக் கொள்வதில்லை’ என்று முன் கூட்டியே பேசிவைத்துக் கொண்டு ‘குஸ்தி’ போடுவார்கள். அத்தகைய ‘குஸ்தி’யாகத்தானிருந்தது, ம. சோ. கட்சிக்கும் — ஆளும் கட்சிக்கும் இடையில் நடைபெற்ற குஸ்தி; அப்படிப்பட்ட - பேசி வைத்துக்கொண்டு நடைபெறும் ‘குஸ்தி’க்குப் புதிய சோஷலிஸ்டுகள் இணங்கமாட்டார்கள்; நாங்கள் உண்மையான ‘குஸ்தி’ போட விரும்புகிறோம்.”

என்று, டாக்டர் லோகியா, புதிய சோஷலிஸ்டுக் கட்சித் துவக்க மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மதத்தின் பெயரால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

‘ஒரு மதச் சடங்கு நடைபெறும்போது போலீசார் குறுக்கிடுவது கூடாது’ என்று உயர் அதிகாரிகளுக்குத் தந்தியும் கொடுக்கப்பட்டதாம்.

சாதுவின் சீடர் அந்தப் பெண்ணை அடிப்பதால் அந்தப் பெண்ணுக்குக் காயங்கள் ஏதும் ஏற்படாது என்பதுடன் அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கும் பிசாசுகளும் ஓடிவிடும் என்றும் கூட்டத்தினர் கூறினராம்!

பாரிப்பாக்கம் கண்ணப்பர் மறைவு

சித்தாந்தப் பேராசிரியரான பாரிப்பாக்கம் கண்ணப்பர் (முதலியார்) அவர்கள் தமது 64-வது வயதில், 30—12—55 காலை மூன்று மணிக்கு இயற்கை எய்தினார்.

அவர் தமிழ்ப் பெரும் புலவர்களில் ஒருவராவார். காலஞ்சென்ற மணி திருநாவுக்கரசனார் அவர்களிடம் முறையாகத் தமிழ் கற்றவர். ‘சர்வே ஆபீசி’ல் அவர் டிராப்ட்மென்னாக இருந்து ஓய்வு பெற்று, தமிழ்ப் பணி புரிந்து வந்தார். மறைந்த தமிழ்ப் பேராசிரியர் க. நமச்சிவாயனார் அவர்களுடன் ஒத்துழைத்து, தமிழ்மறையான திருக்குறள் சிறப்பை இந்தியத் துணைக் கண்டம் முழுதுக்கும் உணர்த்தப் பெரும் பாடுபட்டிருக்கிறார்.

குறிப்பாக அவருடைய பிரிவாற்றுமையால் துயர்பட, ஒரே ஒரு பிள்ளையும், ஐந்து பேரன் பேத்திமாரும் உள்ளனர். அவர்களுக்கு நமது அனுதாபம் உரித்தாகுக.

(ஆ—ர்.)

* *

புயல் நிவாரணச் சிறப்புக் கூட்டம்

1—1—1956 ஞாயிறு மாலை 5 மணிக்கு

சென்னை எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில்

(எழும்பூர் இரயிலடிக்கருகில்) நடைபெறும்

அண்ணா
நெடுஞ்செழியன்
கருணாநிதி

ஆகியோர் பேசுவர்

★

அனுமதி நிபந்தனை : பயன்படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

* *

சென்னை 44-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்—அனுதாபிகளுக்கு

“தினந்தோறும் மாலை 6 மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை, சென்னை மயிலாப்பூர் காரணீஸ்வரர் கோயில் தெரு, 1/2 எண்ணுள்ள கழகப் பணிமனையில், புதிய உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுவர்,”

என்று, செயலாளர் தோழர் ஏ. இராதாகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

திருச்சி நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—1—56 காலை 10 மணிக்கு, திருச்சி பெரியகடை வீதி தி. மு. கழக அலுவலகத்தில், திருச்சி நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

கல்லக்குடி தி. மு. கழக உறுப்பினர்கட்கு

1—1—56 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, கல்லக்குடி தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், தோழர் கோவிந்தன் இல்லத்தில் நடைபெறும். அதுபோது, கழக ஆக்க வேலை, திராவிடர் திருநாள் கொண்டாடுவது, உறுப்பினர்கள் சேர்த்தல் ஆகியவைகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

கடலூர் ஓ. டி. 2-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—1—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு கடலூர் ஓ. டி. 2-வது வட்ட தி.மு கழகச் செயற்குழுக்கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்.

* * *

“கடலூர் ஓ. டி. 2-வது வட்ட தி. மு. கழகத்திற்கு, தினசரி காலை 6 மணி முதல் 8 மணி வரை அண்ணா அன்பு நிலையத்திலும், காலை 8-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை 2-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையிலும், மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அண்ணா அன்பு நிலையத்திலும் தி. மு. கழகப் புது உறுப்பினர்கள் பதிவு மேற்கொள்ளப்படுகிறது என்பதை; கடலூர் ஓ. டி. 1, 2, 3-வது வட்ட தோழர்களுக்கு மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,”

என்று, செயலாளர் தோழர் எஸ். அஜீஸ் அறிவிக்கிறார்.

தமிழ்க் கலை மன்றம் 4-வது ஆண்டு விழா

1—1—56 மாலை 4 மணிக்கு, பெங்களூர், விமானபுரம் விளையாட்டு மைதானத்தில், திருமதி நாகம்மையார் தலைமையில் நடைபெறும். திரு. வி. முனுசாமி சொற்பொழிவாற்றுவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

31—12—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெருவில், தோழர் நா. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். ‘துயர் துடைக்க உயிர் கொடுத்தோர்,’ என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

குடந்தை நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—1—56 காலை 9 மணிக்கு, குடந்தை நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், ஜெ கீழ வீதியிலுள்ள ‘அண்ணா அரண்மனை’யில் நடைபெறும். அதுபோது, 30—10—55 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டக் கணக்குக் காட்டப்படும். செயற்குழு உறுப்பினர்களும், வசூல் செய்வதில் ஒத்துழைத்த தோழர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கீழசண்முகபுரம் (தூத்துக்குடி) பொதுமக்களுக்கு

1—1—56 காலை 8 மணிக்கு, தூத்துக்குடி-கீழசண்முகபுரம் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடு இழந்து தவிப்பவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டி, தோழர்கள் எஸ் நடராஜன் எம்.சி, ஞா சுடலை எம். சி, ஆகியோர் குறவன்-குறத்தி வேடம் தாங்கி வீதிகளில் நிதி வசூல் செய்ய வருவார்கள். பொதுமக்கள் பொருளுதவி செய்யுமாறு 25-வது வார்டு கமிட்டியார் கேட்டுக்கொள்கிறார்கள்.

திருக்குறள் வகுப்பு

31—12—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்துக் கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். ‘பொச்சாவாமை’ என்பது குறித்து திரு. மயிலை சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்.

பரிசுப் போட்டி......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அணா 4—என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு போட்டியிலும் முதல் 2,000 ‘கூப்பன்’களைத்தான் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்; மற்றவற்றை நிராகரித்துவிட வேண்டும். 2,000-த்திற்கு அதிகமாக உள்ள ‘கூப்பன்’களின் கட்டணத் தொகைகளை அனுப்பியவர்களுக்கே திருப்பிவிடவேண்டும்.

பரிசுப் போட்டி நடத்த விரும்புவோர் ‘லைசென்சு’ பெறவேண்டும்; வேறு நபர்களுக்கு ‘லைசென்சை’ மாற்றவோ, விற்கவோ உரிமை கிடையாது.

ஒரு போட்டிக்கு ‘லைசென்சு’ அளித்த பின்னர், அது நடத்தப்படும் முறையையும், முடிவுகளையும் பரிசீலனை செய்ய அனுமதி வழங்கும் அதிகாரி குழு ஒன்றை நியமிப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ